<u>குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்</u>
<u>எஸ்.டி.சி. எண். 56/ 2021</u>

2021 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதி புதன் கிழமை புகார்தாரர் தரப்பு சாட்சியாகிய 1 வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. எம். உமா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. சிவபெருமாள் | வயது | : |
| த/பெ | : நாராயணன் | தொழில் | : |
| ஊர் | : ஆர்.சி.செட்டிபட்டி அஞ்சல் பல்பாக்கி | சமயம் | : |
| வட்டம் | : ஓமலூர் | ஜாதி | : |
| மாவட்டம் | : சேலம் | | |
| ம.சா | : 1 | தேதி | : 22.12.2021 |

<u>முதல் விசாரணை</u>:

நான் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஆர்.சி.செட்டிபட்டி அஞ்சல், பல்பாக்கியில் வசித்து வரும் நாராயணன் மகன் சிவபெருமாள் ஆகிய நான் பிரமாணமாய் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் நான் மேற்படி வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்திற்காக பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையென்று உறுதி கூறுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு வழக்கு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| வ . எண் | தேதி | சான்றாவணங்கள் | ஆவண குறியீடு | ஆவணத் தன்மை |
|---|---|---|---|---|
| 1. | 09.07.2020 | புகார்தாரருக்கு எதிரி கொடுத்த காசோலை எண். 869350 | வா.சா ஆ.1 | அசல் |
| 2. | 10.07.2020 | காசோலை திருப்பப்பட்ட மெமோ | வா.சா ஆ.2 | அசல் |
| 3. | 03.08.2020 | சட்ட அறிவிப்பு | வா.சா ஆ.3 | அலுவலக நகல் |
| 4. | 04.08.2020 | ஒப்புகை அட்டை | வா.சா ஆ.4 | அசல் |

மேற்கண்ட ஆவணங்களை ஏற்று எதிரியை மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்படி தண்டிக்குமாறும் இழப்பீடு வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

(எதிர்தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/ எம்.ஏ. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.